விலை சதம் 10

# சுதந்திரன்

SUTANTIRAN

வ. ஆ. 2001, சித்திரை 27உ ஞாயிறு (10-5-70) ற. அவ்வல் பிறை 3 — புத்தகம் 24 இதழ் 33

## சுதந்திரக் கட்சியும் யூ. என். பியும் தமிழரசுக் கட்சியின் காலில் மண்டியிடுவது நிச்சயம்!

### சிங்களப் பிரமுகர் கூறுகிறார்!

அனுராதபுரம் மே-8

4.5.70ல் அனுராதபுரத்திலுள்ள ஹரிச்சந்திர முற்றவெளியில் சிங்கள மகாஜன கட்சியில் போட்டியிடும் அல்விஸ் அவர்களை ஆதரிக்குமுகமாக நடந்த பிரசாரக் கூட்டத்தில் தமிழ்த் துவேசம் கீழ்த்தரமான முறையில் பேசப்பட்டது.

சிங்கள மகாஜன கட்சியின் காரியதரிசி வீரக்கொடி பேசும்போழுது நான் அனுராதபுரத்துக்கு வந்துகொண்டிருக்கும்பொழுது வழியில் பல வழிகாட்டும் பலகைகளிலுள்ள தமிழ்எழுத்தை தார் கொண்டு அழித்திருப்பதை கண்ணுற்ற நான் ஒன்றை மட்டும் உணர்ந்துகொண்

(4-ம் பக்கம் பார்க்க)

வி. பொன்னம்பலத்தின் தோழர் சொல்கிறார்:

## 'தமிழ் மொழிச் சட்டவிதிகள் மாபெரும் துரோகம்'

1966ம் ஆண்டு சனவரி 8ம் நாள் தமிழரசுக் கட்சியின் நெருக்குதலால் யூ: என்: பி: கொண்டுவந்து நிறைவேற்றிய தமிழ்மொழிச் சட்டவிதிகள் சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட பெருந்துரோகமாகும். இந்த விதிகளின் படி ஒவ்வொரு சிங்கள ஊழியரும் தமக்கு தமிழில் கிடைக்கும் கடிதங்களுக்கு உத்தியோகபூர்வமான பதிலையும் தமிழிலேயே எழுதவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் பொருள் அரசாங்க சேவையில் சேர விரும்பும் ஒவ்வொரு சிங்களவரும் தமிழ்படிக்க வேண்டுமென்பதாகும்.
—(டெயிலி நியூஸ் 9-5-70)

—இவ்வாறு வகுப்புவெறிபிடித்து அலறியிருக்கிறார் காங்கேசன்துறையில் போட்டியிடும் கம்யூனிஸ்ட் வேட்பாளர் வி. பொன்னம்பலத்தின் கூட்டணி சகாவும் சு. கட்சி பிரமுகருமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா. வடக்கே போட்டியிடும் கூட்டணி வேட்பாளர்கள் என்ன பதில் கூறப்போகிறார்கள் இதற்கு?

### சுயாட்சி என்னாச்சு? சுண்டைக்காய் ஆச்சு!

''தமிழ் காங்கிரசை விட பிற்போக்கான கட்சி தமிழரசுக் கட்சி.''

—ஊர்காவற்றுறை நவரெத்தினம் (வீரகேசரி 9-5-70)

### தமிழரசு ஆதரவாளர் வீடுகளுக்கு தீ வைப்பு!!

திருகோணமலை, மே 8

சென்ற 1-5-70 அன்று, நவரெட்ணராசாவின் கோட்டையென வருணிக்கப்பட்ட 2ம் வட்டாரத்தில் அவ்வட்டார வாலிபர்களின் முயற்சியினால் தமிழரசு வாலிப முன்னணியொன்று திறந்து வைக்கப்பட்டது. சுமார் இரண்டாயிரம் மக்கள் முன்னிலையிலே தமது வாலிப முன்னணிக் கிளையின் திறப்பு விழாவை வெற்றிகரமாக நடத்திமுடித்து விட்ட வெற்றிக்களிப்பிலே நின்று கொண்டிருந்த தமிழரசு வாலிபர்களுக்கு பேரிடியொன்று காத்திருந்தது.

(4ம் பக்கம் பார்க்க)

மகாவலியுடன்

# சிங்கள வெள்ளமும் வடக்கு நோக்கி திருப்பி விடப்படுமாம்!

## யூ. என். பியின் அந்தரங்க நோக்கத்தை அம்பலப்படுத்துகிறார் சூரியப்பெருமா!

கொழும்பு—மே 8

மகாவலித் திட்டம் என்ற போர்வையின் கீழ் தமிழ்ப் பகுதிகளில் சிங்களவரைக் குடியேற்றும் திட்டம் ஒன்றை யூ. என். பி. வைத்திருக்கிறதா? இந்தப் பரபரப்பான கேள்வி இப்போது தமிழ் மக்கள் மத்தியில்எழுந்திருக்கிறது.

இந்தக் கேள்வி யெழக் காரணம் யூ. என். பி. யின் அத்தனகலத் தொகுதிவேட்பாளர் திரு, ஜே. ஆர். பி. சூரியப் பெருமா அம்பலாங்கொடையில் ஒரு தேர்தல் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள் ஆகும்.

என்னை அனுப்புங்கள்; நான் மூன்றாண்டுகளுக்குள் யாழ்ப்பாணத்துக்கு மகாவலித் தண்ணீரை போத்தலில் என்றாலும் கொண்டு வந்து விடுவேன் என்று கோயபல்ஸ் புழுகுணிப் பிரசாரத்தில் ஒரு சில அரசியல் வாதிகள் வடக்கே இறங்கியிருக்கும் இத்தருணத்தில் யூ. என். பி. கட்சியைச் சேர்ந்த திரு. சூரியப் பெருமா என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

'மாகாவலி திருப்பப்படும்போது, வடக்கு நோக்கி மாவலித்தண்ணீர் மட்டுமே செல்லாது.

மாவலித் தண்ணீருடன் தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்களும், சிங்களக் குடியேற்ற வாசிகளும், சிங்கள கலாசாரமும் வடக்கு நோக்கி செல்ல இருக்கின்றன.

இதனால்தான்மாவலியைதிருப்பும் திட்டத்தை சமஷ்டிக் கட்சி விரும்பவில்லை'

—இவ்வாறு திரு. சூரியபெருமா கூறியிருப்பதாக (3-5-70) டெயிலி நியூஸ் ஏடு தெரிவிக்கிறது.

மாவலிவருகிறது என்று மாவலியைக்காட்டி பொய்ப் பிரச்சாரம் செய்து வாக்குப் பிச்சை கேட்கும் தமிழ்க்காங்கிரசார் இதற்கு கூறப்போகும் பதில் என்ன என்று தமிழ் மக்கள்கேட்கிறார்கள்.

## திருமலையில் பல்கலைக்கழகம் வேண்டுமா? தமிழரசாரை அனுப்புங்கள்—ஜீ. ஜீ.

திருகோணமலையில் பல்கலைக் கழகம் வேண்டுமாயின், தமிழரக் கட்சியினரை பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள்.


—ஜீ. ஜீ. (வீரகேசரி)
9-5-70

## குருக்கள்மடம் மக்களின் ஆதரவு தமிழ் அரசுக்கே! இராசமாணிக்கத்துக்கு பணமுடிப்பு வழங்க ஏற்பாடு

(களுவாஞ்சிகுடி நிருபர்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எந்தக்கட்சி வேட்பாளரைஆதரித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது என்பதுபற்றி ஆலோசித்து ஒரு தீர்க்கமான முடிவெடுக்கும் முகமாக அண்மையில் குருக்கள் மடம் மக்களால் மேற்படி கிராமத்தில் கிராமத்தலைவர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு மேற்படி கிராம மக்கள் எல்லோரும் சமூகம் கொடுத்திருந்தனர்.

சபையோரைப் பார்த்து தலைவர் இம்முறை நாம் நாடாளுமன்றத்துக்குயாரை அனுப்புவதற்கு உங்கள் பூரணமுடிவு தேவை என்றார். உடனே சபையில் இருந்த மக்கள் எல்லோரும் தமிழ் மக்கள் நம் உரிமைகளுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டுவருபவர் திரு. இராசமாணிக்கம், அவரும் தமிழ் அரசுக்கட்சியும் இருந்திராவிட்டால் இன்று இருப்பதுபோல் ஓரளவு சுதந்திரத்துடன் வாழமுடியாது, ஆகவே இம்முறையும் திரு, இராசமாணிக்கத்தையே நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும். அவர் சென்றால்தான் நம் பகுதிகட்கு ஓரளவு அபிவிருத்தி வேலை செய்து தருவார்; ஆகவே நம் கிராம மக்கள் எல்லோரும் தமிழ் அரசுக் கட்சியையே ஆதரிக்க வேண்டும் என்றும் கூறினர். பின் அனைவரின் வேண்டுகோளுக்கிணங்கவும் திரு. இராசமாணிக்கத்துக்கு குருக்கள் மட மக்கள் சார்பில் ஒரு பணமுடிப்பும் வழங்க முடிவு செய்து அதற்காகவும் பிரசார வேலைகளை கவனிக்கவும் ஒரு குழு நியமிக்கப்பட்டது.



### கொழும்புவாழ் காரைநகர் மக்கள் தமிழரசுக்கே ஆதரவு!

(சுதந்திரன் நிருபர்)

கொழும்பு வாழ் காரைநகர் வாக்காளர்கள் பலர் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தங்கள் வாக்குகளை யாருக்கு போடுவது, யாரை ஆதரிப்பது என்பது பற்றி அண்மையில் கொழும்பில் கூடி ஆராய்ந்தனர்.

இறுதியில், தமிழரசு வேட்பாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களையே ஆதரிப்பதென்றும் காரைநகரில் திரு. அமிர்தலிங்கத்துக்காக பிரசாரம் செய்ய ஒரு குழுவை இங்கிருந்து அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## கல்குடாவில் ஜனநாயகம் செத்துவிட்டதா?

பொதுமக்கள் கேள்வி

கல்குடா, வே 8

கல்குடாத் தொகுதியில் ஜனநாயகம் செத்துவிட்டதாக இப்போது பேசிக்கொள்ளப்படுகிறது,

யூ. என். பி. காடையர்கள் தமிழரசுக்கட்சித் தொண்டர்களை கண்ட கண்ட இடங்களில் தாக்கி வருகின்றார்களாம்.

அண்மையில் ஏறாவூர் குடியிருப்புபோன்ற இடங்களிலும் பலர் தாக்கப்பட்டதாக அறியப்படுகிறது. இதன் காரணமாகச் சிலர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்று வருகின்றனராம். இப்படித் தொண்டர்களைத் தாக்குவோர் மதுபோதையிலிருப்பதாகவும் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

### இன்று பிரசாரக் கூட்டம்

மன்னார் தொகுதியிலுள்ள முருங்கன், அடம்பன் ஆகிய இடங்களில் தமிழரசுக்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

### வெளிநாட்டவர்க்குத் தமிழ்ப் புத்தகங்கள்

பீஜி, மொரிசியஸ் தீவுகளில் தமிழை மறந்து வரும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் புகட்டத் தமிழ் நூல்கள் கிடைப்பதில்லை. தமிழ்ப் பற்றுமிக்க அன்பர்கள் பழைய, புதிய தமிழ்ப் பாடப்புத்தகங்களைக் கீழ்க் காணும் முகவரிகளுக்கு அனுப்பி உதவலாம். இவ்வாறு வெளிமடை உலகத் தமிழ் நண்பர் கழகம் தமிழன்பர்களுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளது.

K. APPAPILLAI,
P. O. BOX 779,
SUVA,
FIJI ISLANDS.

S. PONNAN,
REUNION ROAD,
VACOAS,
MAURITIUS.

### அவர்கள் எண்ணத்தில்...!

யூ: என்: பி. தமிழரசுக் கட்சியை இனி ஒருபோதும் கூட்டுச் சேர்க்காது. —ஜீ. ஜீ.

தேர்தல் முடிந்ததும் யூ. என். பி. யும் தமிழரசும் சேர்ந்துவிடும்.

—ரி. பி. இலங்கரத்ன

# எண்ணம்

## நோயாளி இறந்தபின் ஆபரேஷனு?

'தமிழரைச்சம பிரஜைகளாக ஏற்று அவர்களுக்கு சம சந்தர்ப்பம் அளிக்காவிடின் தேசிய ஐக்கியம் என்பது ஒரு விசித்திரமாகவே முடியும் என்பதையும் தேசிய அபிவிருத்தி என்பது மீட்சிக்கு இடமின்றி பின்னடைந்து விடுமென்பதையும் நாட்டின் அதிருப்தியுற்ற ஒரு பிரிவினரான தமிழ் மக்கள் ஐந்தாம்படையினராக மாறி விடுவரென்பதையும் இறுதியில் தமது சுயநிர்ணய உரிமையை விடுக்கத் தீர்மானிப்பர் என்பதையும் சிங்கள மக்கள் உணர்வரென்று நாம் நம்புகிறோம்.

இவ்வாறு வட இலங்கை தமிழ் காங்கிரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளது;

இதை யொட்டி திரு: பொன்னம்பலம் அவர்களை நோக்கி நாம் பின்வரும் வினாக்களை விடுக்கிறோம்.

(i) 1947ம் ஆண்டு நவம்பர் 22ந் திகதி இலங்கைத் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும்; ஒற்றையாட்சியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்; என்று பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு தந்தியடித்தீர்களே! அது நினைவிலிருக்கிறதா? பின்னர் சுயநிர்ணயக் கோரிக்கையை கைவிட்டு ஒற்றையாட்சியை ஏற்று மந்திரிப் பதவிக்காக தமிழினத்தின் காலை வாரி விட்டீர்கள்!

அப்படிப்பட்ட ஒற்றை ஆட்சித் திட்டத்தின் தாசானுதாசரான தாங்கள் தமிழர்கள் எதிர்காலத்தில் சுயநிர்ணய உரிமை கோரவேண்டி வரும் என்று இன்று விடுக்கும் 'எச்சரிக்கையை' எந்தச் சிங்களவனுவது 'சீரியசாக' கருதுவானு?

(ii) சுயநிர்ணய உரிமையை ஒரு இனம் நிலை நாட்ட வேண்டுமாயின் அதற்கு என்று ஒரு தனிப் பிரதேசம் இருக்க வேண்டும் என்ற அடிப்படை உண்மையை மறுக்க மாட்டீர்கள் என்று நம்புகிறோம். நீங்கள் ஆதரிக்கும் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் உங்கள் ஆதரவுடன், நீங்கள் மந்திரிப் பதவி வகித்த காலத்தில் தான், தனித் தமிழ் பிரதேசமாக விளங்கிய கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியில் சிங்களக் குடியேற்றம் தீவிரமாக நடத்தப்பட்டது. கல்லோயாவும், அல்லையும், அம்பாறையும் மூதூரும் பதவியாவும் தமிழ் மக்களிடமிருந்து பறிபோயின.

இப்படி ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் தமிழ்ப் பிரதேசங்களையெல்லாம் தாரை வார்த்துவிட்டு பின்னர் எப்படி சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை உங்களால் விடுக்க முடியும்? பிரதேசத்தைப் பறிகொடுத்த பின்னர் என்ன ஐயா சுயநிர்ணய உரிமை? யாருக்கு விடுகிறீர்கள் டுப்? நோயாளி இறந்த பின்னர்தான் ஆபரேஷன் செய்யப் போகிறீர்களா?

(3) ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் தமிழ் பேசும் மக்களின் தாயகம் பறிபோய்க் கொண்டிருக்கிறது:—இதைத்தடுத்து நிறுத்தி தமிழ்ப்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாப்பதற்குத்தான் தமிழரசுக் கட்சி சிங்கள ஏகாதிபத்தியத்தைப் பணிய வைத்து இரு ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளும்படி செய்தது. (i) 1957ம் ஆண்டின் பண்டா—செல்வா ஒப்பந்தம். (ii) 1965ம் ஆண்டின் டட்லி—செல்வா ஒப்பந்தம். இந்த இரு ஒப்பந்தங்களின் அடிப்படையில் பிரதேச சபை; அல்லது மாவட்ட சபைகள் நிறுவப்பட்டிருந்தால், தமிழ் பேசும் மக்கள் தமது பிரதேசத்தை சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க வழி பிறந்திருக்கும். இந்த இரண்டையும் எதிர்த்துப் பாழாக்கிய நீங்கள் இன்று சுய நிர்ணய உரிமை, கத்தரிக்காய் என்று எல்லாம் பேசுவது யாரை ஏமாற்றுவதற்கு?

(4) ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தைப் பாதுகாக்க முடியாதென்பது அனுபவரீதியாகக் கண்ட உண்மையாகி விட்டது. இதனுல்தான், தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்கள் தமது பிரதேசங்களைத் தாமே ஆளக்கூடிய சுய நிர்ணய அடிப்படையில் சமஷ்டி அரசுக்குட்பட்ட சுய ஆட்சியை நிறுவுவதை தனது அடிப்படை இலட்சியமாகக் கொண்டு அதற்காகப் போராடி வருகிறது.

ஒற்றையாட்சியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு சுய நிர்ணய உரிமை கோரவேண்டிவரும் என்று அலறும் தாங்கள் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக 1948ம்ஆண்டு தங்கள் கட்சிவிட்ட இடத்திலிருந்து வாதாடி வரும் தமிழரசுக் கட்சியை எதிர்ப்பது ஏன்?

5. தமிழ் பேசும்மக்கள் ஐந்தாம் படைகளாக வேண்டி வரும்என்று வேறு மிரட்டுகிறீர்கள். நீங்கள் தமிழினத்துக்கு இன்று செய்துவருவது அந்த வேலைதானே! எனவே இது குறித்து நாம் ஆச்சரியமடையவில்லை. ஆனுல், தமிழினம் ஐந்தாம் படையாக மாருமல் இந்த நாட்டுக்கு விசுவாசமாக இருந்துகொண்டு, அதே வேளையில் தமது சுயாதீனத்தையும், சுதந்திரத்தையும் நிலைநாட்டி தலைநிமிர்ந்து வாழ வழிவகுப்பது சமஷ்டி அரசியல் திட்டம் என்ற பச்சை உண்மையை ஏன் ஏற்க மறுக்கிறீர்கள்?

நாம் சிங்கள மக்களுக்கு ஒன்று கூறவிரும்புகிறோம், தமிழ் மக்கள் திரு. பொன்னம்பலம் கூறுவதுபோல ஐந்தாம் படையாக ஒருபோதும் மாறமாட்டார்கள்; ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு அடிமைகளாகவாழ ஒருப்படவும் மாட்டார்கள். ஒரு சமஷ்டி அரசின் கீழ் சிங்கள மக்களுடன் சரிநிகர் சமானமாகத் சுதந்திர மக்களாக—தமது பகுதியை தாமே ஆளும் அதே நேரத்தில் சிங்கள மக்களுடன் சேர்ந்து இலங்கை முழுவதையும் ஆளுவதே தமிழ் பேசும் மக்களின் ஒரே இலட்சியமாகும். இதை பொதுத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் நிச்சயமாக நிரூபித்து காட்டுவார்கள்.

# குமாரசாமியை விட 10 மடங்கு சேவை நவம் செய்திருக்கிறுர்!

## புள்ளி விபரங்களுடன் இதை நிருபிக்க தயார்! உசனில் செல்வன் மாறன் பேச்சு!

அபின் கதை முடிந்தது; இலஞ்சக் கதை சரிந்தது; இப்பொழுது பழைய 'றெக்காட்' ஒன்றைப் புது வீசியில் போடுகிறுர்கள் பதினுன்கு ஆண்டுகளும் பண்ணியதென்ன—என்று!

நித்திரையாகக் இடப்பவனை எழுப்பலாம்; நித்திரை போற் கிடப்பவனை எழுப்ப முடியாது.


1965ம் ஆண்டிலேயே புள்ளி விபரங்கள் கொடுக்கப்பட்டு விட்டன.

திருவாளர். வே: குமாரசாமி அவர்கள் சிங்கள யூ. என். பியின் செல்லப்பிள்ளையாக இருந்து—அரை மந்திரியாக இருந்து தனது 9 ஆண்டு காலச் சேவையில் செய்ததை விடத் திரு: நவரத்தினம் எதிர்க்கட்சியில் இருந்து, அமைச்சர்கட்குக் கறுப்புக் கொடி காட்டி, சத்தியாக்கிரகம், சிறைச்சாலை முதலிய நெருக்கடியான சூழ் நிலைகளிலும் இரு மடங்கு கூடச் செய்திருக்கிறுர்.

1965க்குப் பின் திரு. நவரத்தினம் அவகர்கள் செய்ததைச் சொன்னுல் திருவாளர் குமாரசாமி அவர்கள் செய்ததைவிடப் பத்து மடங்குகள் கூடவாயிருக்கும்.

குறிப்பாகச சச்சாயில் தொடங்க இருக்கும் நவீன உப்பளம் ஒன்றிற்கு ஈடாகுமா திரு. குமாரசாமி அவர்களின் சேவைகள்? நாவற் குழியில் இருக்கும் தானியக் களஞ்சியம் யார் செய்தது? ஆயுள் வேதக் கல்லூரி யாருடையது? சாவகச்சேரித் தொகுதியிலுள்ள எந்தப் பள்ளிக் கூடம், எந்த ஆசுப்பத்திரி திரு. நவரத்தினம் அவர்களின் சேவை முத்திரை ஒட்டப்படாமலிருக்கிறது?

கொடிகாமம், மீசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி



றெயில் நிலையங்களைப் பார்த்தாலே தெரியும் திரு. நவரத்தினம் அவர்களின் சேவையைப் பற்றி—

காங்கிரசு நண்பர்கள் இந்தக் கயமைத்தனமான கதைகளைக் கிராமங்களில் சொல்லச் செல்லும் ஒவ்வொரு வீதிகளுக்கும் பேசுஞ் சக்தியிருந்தால் நவரத்தினம் அவர்களின் சேவை பற்றிப் புகழ் பாடிக்கொண்டிருக்கும்! அரசாங்கத்திலிருந்து மான்யம் பெற்றது மட்டுமல்ல வாலிப முன்னணித் தோழர்களுடன் தானுமோர் ஆளாக நின்று சிரமதான மூலமாகப் போடப்பட்ட வீதிகள் மட்டுமே ஐம்பதுக்கு அதிகமாக இருக்கும்?

பதினேழு வருஷமும் பண்ணினதென்ன? என்று கேட்கிறீர்களா? நன்றி மறப்பது நன்றல்லாமல் நன்றல்லாதது அன்றே மறந்த அறத்தின் உச்சிக்கே சென்ற பண்புடைத் தமிழினத்தின் பண்பிற்கே உலைவைக்கிறீர்களே! உருப்படுவீர்களா?

இனம், மொழி, கலை, கலாச்சாரத்தின் பெருமை பற்றிப் பேசி அவற்றின் சிதைவுகளைச் சீர் செய்வதற்கு காங்கிரசாரின் திட்டமென்ன? பொருள் வளத்தை இனத்தை, மொழியை சிங்களத்திற்கு அடகு வைக்காமல் எப்படிப் பெருக்கலாம் எனச் சொல்லி வாக்குக் கேட்கலாமே!

சாவகச்சேரியில் விறகு காலை—கைதடியில் மடம் கட்டினேன் வாக்குகளைத் தாருங்கள் என்று கேட்கும் பொழுது கொஞ்சமாவது வாய் கூசுவதில்லையா? தன்மானம் தடுப்பதில்லையா? விழுப்புண் படாதநாளை வீண் நாளாகக் கழித்த தமிழன் ஆசுப்பத்திரி கட்டியதற்காகக் கைகட்டலாமா?

2000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டு, 89 மொழிகளுக்கு மேல் எழுதப்பட்ட ஒரே வாழ்வுச் சட்டநூலாம் திருக்குறளைப் பெற்ற நாம் மகளிர் மாவித்தியாலயம் கட்டியதற்காக அடிமையாகலாமா?

(4-ம் பக்கம் பார்க்க)

### தமிழரசு ஆதரவாளர்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆமாம்! திறப்புவிழா முடிவடைந்து மக்கள் வெள்ளம் கலைந்துவிட்ட பின்னர் சாமான்களை அகற்றிக் கொண்டிந்த வாலிபர்கள் குறிப்பிட்ட இவ் வாலிப முன்னணிக்குச் சற்றுத் தள்ளி சில வீடுகள் எரிவதைக் கண்டனர். இவ் வாலிப முன்னணிக்குச் சற்றுத் தள்ளி சில வீடுகள் எரிவதைக் கண்டனர். இவ் வாலிப முன்னணியின் சில அங்கத்தவர்களுடைய வீடுகளே அப்படி எரிந்து கொண்டிருந்தன.

ஓடோடி வந்த வாலிபர்கள் தம் பெருமுயற்சியினுல் வீடுகளுக்கு அதிக சேதம் ஏற்படாதவாறு தீயை அணைத்துவிட்டனர். சுமார் எட்டு வீடுகள் கருகிச் சாம்பராகி இருக்கவேண்டிய நிலையிலிருந்து அரையும் குறையுமாக காப்பாற்றப் பட்டுவிட்டன.

இவ் வாலிப முன்னணியினரின் முயற்சிகளுக்கு ஆரம்பமுதலே தடைக்கல்லாக இருந்தவர்களும், திருகோணமலையில் போட்டியிடுகின்ற பிறிதொரு கட்சியினைச் சேர்தவர்களுமாகிய சிலரே இப் படுபாதகமான செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. விஷமிகளின் இக் காடைத்தனமான செயலை சம்பவத்தின் போது கூடி நின்ற மக்களனைவரும் கண்டித்தனர்.

## எழில் தமிழ் ஆளர் இராசதுரை!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் மலிந்த இன்றைய ஈழத்தில் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சிகளுக்காகவே அரசியல் நடாத்த முன்வந்த மாபெரும் சக்தி மிக்க இயக்கம். அதனுல் அத்தார்மீக நல்லெண்ணங்கள் இராசதுரையின் பண்புகளோடும் பிணைந்துவிட்டன.

அதனுல்தான் 1956—1960மார்ச், 1960ஜுலை, 1965என்று ஒவ்வொரு தடவையும் எவராலும் பெற முடியாதளவுக்குப் பெரும் பான்மையான வாக்குகளால் நாடாளுமன்றம் புக முடிந்தது.

எப்படி அவர் 'சுதந்திரன்' பத்திரிகையில் துணை ஆசிரியராக வீற்றிருந்து இன உணர்வு, சுதந்திர எண்ணம், சம உரிமை பற்றியெல்லாம் மக்கள் மனதில் நல்லெண்ணங்களைப் பரப்பினுரோ அப்படியே அவர் நாடாளுமன்றப் பிரதிநிதியான பின்னரும் தமது நாட்டின் நலத்துக்காகவே சேவை புரிந்து வருகின்றுர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று புதிய பாதைகள், மருத்துவ மனைகள். பள்ளிக்கூட சீர்திருத்தங்கள் முதலியனவும்வேறு புனருத்தாரண வேலைகளும் இடம் பெற்றிருக்கின்றன வென்றுல் அது சொல்லின் செல்வர் செ. இராசதுரையின் அரும் பணிகளின் பலாபலன்களே.

இளமை முதலே இவரிடம் புரட்சிகரமான சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் மிளிரலாயின. அதனுல் உலகத்தில் சமுதாய அமைப்பில் புனருத்தாரணம் செய்த சிற்பிகளெல்லாம் இவரைக் கவர்ந்தார்கள். அதில் அறிஞர் அண்ணுவைச் சிறப்பாக குறிப்பிடலாம். அதனுலேயே திரு செ. இராசதுரை அவர்களை அண்ணு நேரடியாகவே பாராட்டியதோடு ஈழத் தமிழ் பேசும் மக்களுக்கு இதே பாதையில் தொடர்ந்து போராடும்படியும் வேண்டிக் கொண்டார். இன்றும் செ. இ. க்கு கலைஞர் கருணுநிதி போன்ற தமிழர் நலன் கருதும் தலைவர்களிடமெல்லாம்நெருக்கமான நட்புரிமையுண்டு.

இன்று அவரைச் சூழ்ந்து ஒரு மாபெரும் இளைஞர் பட்டாளமே நிற்கிறது. அதுமட்டுமா? பெரியவர்களும் இராசதுரை மட்டக்களப்பின் மைந்தன் எனத் தமது ஆதரவைத் தருகின்றனர். இது எதைக்காட்டுகிறது?

இந்த 1970 மே தேர்தலில் செ.இ, அனைவரும் வியக்கும் வண்ணம் மாபெரும் வாகை சூடி மீண்டும் முதலாவது பிரதிநிதியாகும் சுபவேளையைத்தான் காட்டுகின்றது!

தமிழரசுப் படைவீரர் வரிசை (2)

## எழில் தமிழ் ஆளர் இராசதுரை



சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் நமது தேசியக் கொடிபற்றி விவாதிக்கப்பட்டபோது அப்போது மட்டக்களப்பு பாராளுமன்ற பிரதிநிதியாக இருந்த ஜனாப் சின்ன லெப்பை அவர்களும் சிங்கக் கொடி ஈழத்தின் தேசியக் கொடியாக இருக்க வேண்டுமென வாக்களித்தார். அதை எதிர்த்து மட்டக்களப்பில் மாபெரும் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் மிக மிக இளைய வாலிபரொருவர் கனல்கக்கப் பேசினார். அவரை அதுமுதல் மட்டுநகர்த் தமிழகமே இருகரம் நீட்டி வரவேற்றது. அவர்தான் 'சொல்லின் செல்வர்' என்று இன்று ஈழமும், தமிழகமும் பெருமையுடன் அழைக்கும் திரு. செ. இராசதுரை அவர்களாகும்.

திரு. செ. இராசதுரை அவர்கள் தமது மாணவப்பருவ முதல் தமிழ்—தமிழ்பேசும் மக்கள் என்ற இன—மொழி உணர்ச்சிகளுக் காட்பட்டே வாழ்ந்திருக்கின்றார்.

தமிழ்பேசும் இன மக்களுக்காக எங்காவது திங்கு விளைவிக்கப்படுகிறதென்றால் அங்கு நிச்சயமாக இராசதுரையின் குரல் முழங்கும்.

இளமை முதலே மட்டக்களப்பு மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்ட அவர் மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய தனக்கேற்ற ஒரு இயக்கத்தைத் தேடலானார். அதன் பலனாகவே அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்தார்.

அன்று முதலே தமிழரசுக் கட்சியின் மிகக் கவர்ச்சிகரமான சொல்லாற்றல் மிக்க தோர் தலைவராக இவர் திகழ்கின்றார். இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுள்ளத்திலும் அவருக்குத் தனியானதோர் இடம் இருக்கின்றது. இன்று எந்தக் கூட்டத்திலாவது இராசதுரை வருகிறாரென்றால் அவருக்காக ஒரு மாபெரும் கூட்டமே திரண்டுவரத் தயாராயிருக்கின்றது. அவர் தமிழ்பேசும் மக்களின் சுபிட்சத்துக்காகவே வாழ்கின்றார், அரசியல் நடத்துகின்றார் என்பதனாலேயே அவருக்கு இப்படியான தோர் வரவேற்பிருக்கின்றது.

எதெதற் கெல்லாமோ அரசியல் நடாத்துகின்ற

(2-ம் பக்கம் பார்க்க)

# ஒத்துழைப்பும் சம அந்தஸ்தும் தமது கொள்கையாம்!

# தமிழரசு இப்போதுதான் இதை ஏற்றுக் கொண்டதாம்!

## தமிழ் காங்கிரஸ் தலைவரின் பிதற்றல்!

### சம அந்தஸ்தை கண்டு பிடிக்க 22 ஆண்டுகள்! சமஷ்டியை கண்டு பிடிக்க எத்தனையோ?

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கட்டுவனில் ஒரு கூட்டத்தில் பேசும்போது தமிழரசுக் கட்சி இப்போது தான் சிங்கள மக்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொண்டதாகப் பேசியதாக 7-5-70 'ஈழநாடு' பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இதை 1948ஆம் ஆண்டு முதலே காங்கிரஸ் சொல்வதாகவும் தமிழரசினர் 22 ஆண்டுகளின் பின்னர் இப்போது தான் இக்கொள்கையை ஏற்றுள்ளதாகவும் ஜீ. ஜீ. பிதற்றியிருக்கின்றார்.

உண்மையாகவே இந்த 22 ஆண்டுகளும் 'குருடராக' இருந்தவர் யார் என்பது இலங்கையின் அரசியலை நுணுகிப்பார்த்து வருவோர்க்குத் தெரியும்.

இலங்கைத தமிழரசுக் கட்சி தோன்றிய நாட்தொட்டே சிங்களவருடன் சகோதரத்துவத்துடன்—சம அந்தஸ்துடன் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று தான் கூறிவருகின்றது. தமிழரசாரின் ஒவ்வொரு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இதை ஜீ. ஜீ. இப்போது கண்டு பிடித்திருப்பதுதான் நகைப்புக்கிடமாயிருக்கிறது. இதைக் கண்டு பிடிக்கவே இந்த மகானுபாவருக்கு 22 ஆண்டுகள் சென்றால் சமஷ்டி என்ற உன்னத தத்துவத்தை விளங்கிக்கொள்ள இன்னமும் ஒரு நூற்றுண்டும் போதாதுதான்.

தமிழரசுக் கட்சியும் சிங்களவருடன் ஒத்துழைத்து வாழவேண்டும் என்றுதான் 22 ஆண்டுகளாக கூறிவருகிறது. ஆனால் பொன்னம்பலம் கூறுவதுபோல அடிமைகளாக தமிழர்கள் வாழவேண்டுமென்பதைத் தான் தமிழரசுக் கட்சி ஏற்க மறுக்கிறது.

தமிழரசுக்கட்சி ஒத்துழைப்பு என்று கூறும்போது முழுச் சுதந்திரத்துடன்—நம்மை நாமே ஆளக்கூடிய நிலையிலிருந்தபடியும்—எவருக்கும் அடிபணியாது தமிழருக்கு எவருமே எஜமானராய் இருக்காத ஒரு ஒத்துழைப்பையே நாடி நிற்கிறது.

ஆனால் காங்கிரஸ் கூறும் ஒத்துழைப்பு என்பதென்ன? சிங்களத்துரைமார் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி; அவர்களின் சித்தமே தமது பாக்கியமாக; சுயமாக, சுதந்திரமாக எதுவும் செய்ய முடியாத ஒரு நிலையைத்தான் காங்கிரஸ் சொல்கிறது.

இதற்குப் பெயர் ஒத்துழைப்பா? தமிழினத்தை அழிக்கத் திட்டமிட்டவர்களுக்கு முதுகுவளைத்து, தலை சொறிவதுதான் (காங்கிரசின்) ஒத்துழைப்பு என்றால் அது தமிழ் பேசும் மக்களுக்குத் தேவையேயில்லை.

தமிழரசுக் கட்சி எப்படிச் சிங்களச் சகோதரர்களுடன் ஒத்துழைக்க விரும்புகிறது என்று அவர்களுக்கே விளக்கும் வகையில் 1960ம் ஆண்டு விஞ்ஞாபனத்திலும் இப்படிக் குறிப்பிட்டுள்ளது:—

One of the fundamental policies of the party is "The maintenance of good will and Co-operation with the Sinhalese people in the interest of Federal solidarity and fraternity." In the task of securing freedom and justice for all full development of our country, we offer our fullest co—operation as self—respecting brothers to the Sinhalese people.

இதேபோல சம அந்தஸ்து கொள்கையையும் தமிழரசுக் கட்சி இப்போது தான் ஏற்றுக் கொண்டிருப்பதாக கூறி முழுப்பூசணிக்காயைச்சோற்றில் மறைத்திருக்கிறார் திரு. பொன்னம்பலம்.

தமிழுக்கு சிங்களத்துடன் சம அந்தஸ்து வேண்டுமென்பது தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. 1956ம் ஆண்டு திருமலை மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட நான்கு தீர்மானங்களில் சம அந்தஸ்தும் ஒன்றாகும்.

தமிழுக்கு சம அந்தஸ்து வேண்டுமென்று 1956 முதல் ஒவ்வொரு சிம்மாசனப் பிரசங்கத்துக்கும் திருத்தம் கொண்டுவந்த கட்சி தமிழரசுக் கட்சி. ஒவ்வொரு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழரசுக் கட்சியின் சம அந்தஸ்து கோரிக்கை வலியுறுத்தப்பட்டே வருகிறது. திருவாளர் பொன்னம்பலம் தமிழரசுக் கட்சியின் முந்திய தேர்தல் விஞ்ஞாபனங்களை தேடிப்பிடித்து வாசித்துப் பார்க்கட்டும்.

ஏதோ சம அந்தஸ்து கோரிக்கை தம்முடையது போலவும் அதை தமிழரசுக் கட்சி இப்போதுதான் ஏற்றுக் கொண்டது போலவும் யாருக்கு டூப் அடிக்கிறார்?

இதோ 1960ம் ஆண்டுத் தமிழரசுத் தேர்தல் விஞ்ஞாபனத்தின் 5ம் பக்கத்தில் சம அந்தஸ்து பற்றி கூறப்பட்ட பகுதி! பொன்னரே இதை வாசித்துப்பாருங்கள்:—

"On the question of language Federal Party stands for parity of status between Sinhala and Tamil"

சம அந்தஸ்துக்காகத் தமிழரசுக் கட்சி ஓயாது போராடிப் போராடித்தான்—நாட்டின் இருமாகாணங்களில்—வட, கிழக்கு மாகாணக்களில் தமிழுக்கு அந்தஸ்து 1966ம் ஆண்டு பெற்றுக் கொடுத்தது. மீதி ஏழு மாகாணங்களிலும் சம அந்தஸ்து பெற இப்போது தொடர்ந்து போராடி வருகிறது.

ஆனால் ஜீ. ஜீ. யோ சம அந்தஸ்துக்காக எதுவும் செய்யாமல் இன்னமும் வெறும் கூச்சல் போடும் பிரகிருதியாகவே இருக்கின்றார்.

சம அந்தஸ்து என வாய் கிழியக்கத்தும் இவர் அதற்காக என்ன செய்தார் என்று கூறமுடியுமா? கடந்த 5 ஆண்டுகளில் சம அந்தஸ்து வேண்டும் என்று பாராளுமன்றத்தில் பேசியதாவது இருக்கிறாரா?

1956ல் தனிச் சிங்களச் சட்டம் வந்ததே அதன்பின் தமிழின் அந்தஸ்துக்காக அவர் ஆக்கபூர்வமாக என்ன செய்திருக்கிறார்?

தமிழரசுக் கட்சி வட, கிழக்கு மாகாணங்களிலாவது சம அந்தஸ்து பெற்றுத் தந்ததே, அகில இலங்கையிலும் ஒரு நவீன சம அந்தஸ்து பற்றிப் பிதற்றும் ஜீ. ஜீ. அதற்காக என்னதான் செய்திருக்கிறார்.

இத்தனை வண்ட வாளங்களையும் வைத்துக் கொண்டு ஜீ. ஜீ. இப்படி மாருட்டம் பண்ணுவது, அவரின் சிண்டு முடிதலையும், வால்பிடித்தலையும், குத்துக்கரணங்களையும் தானே துலாம்பரமாகக் காட்டுகின்றன.

# சிங்கள ஏகாதிபத்தியத்தை தமிழரசு எதிர்த்துப் போராடும்!

## அரியாலையில் நாகநாதன் முழக்கம்!

நல்லூர், மே 8

'தென்னிலங்கையிலுள்ள கட்சிகளெல்லாம் இனத்துவேசம் கொண்டுள்ளவை என்பதைக் காலம் எமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது. அந்தச் சிங்களக் கட்சிகளெல்லாம் இந்நாட்டின் தமிழ்க் குடிமக்களை அழிக்கவே கங்கணம் கட்டி நிற்கின்றன. தமிழ் மொழி பிரதேசம் என்பனவற்றைச் சிறுமைப்படுத்துவன் மூலம் தமிழர்களை அழித்துவிடுவதற்கான துரோகச் செயல்களில் அவை ஈடுபட்டு வருகின்றன.'

இவ்வாறு டாக்டர் நாகநாதன் அரியாலையில் நடந்த கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

இதன் காரணம் சோல்பரி—ஒற்றையாட்சித் திட்டங்களே. ஒற்றையாட்சிக் கூட்டங்களினால் பெரும்பான்மைச் சிங்களவரிடமே எல்லா அதிகாரங்களுமிருப்பதால் அவர்களே ஆட்சி அதிகாரமுள்ளவர்களாக மாறிவிட்டார்கள்.

இந்த அநீதி காரணமாகவே தமிழர்க்கு வாழ்வு தரும்பொருட்டு ஒரு சமஷ்டி அரசியலமைப்புத் திட்டத்துக்காகத் தமிழரசுக் கட்சி பாடுபடுகின்றது. ஏனெனில் இலங்கையைப் பொறுத்தமட்டில் சமஷ்டி அரசியலமைப்பில் மட்டுமே தமிழும் தமிழரின் பிரதேசங்களும் பாதுகாக்கப்படும்.

தமிழரசுக் கட்சியின் போராட்டங்களின் காரணமாக நாம் நமது மொழி, பிரதேச அழிவை நியாயமான அளவு பாதுகாத்துமிருக்கின்றோம்.

தமிழரின் மொழியையும், பிறந்த பிரதேசத்தையும் காப்பதற்கு நாம் தொடர்ந்து போராடவே வேண்டிய நிர்ப்பந்தமான நிலையிலிருக்கின்றோம். எனவே சிங்கள அரசாங்கங்களின் இவ்விரண்டு அழிவுத் திட்டங்களையும் எதிர்த்துப்போராட தமிழரசுக் கட்சி திடங்கொண்டுள்ளது.

எனவே இத்தேர்தல் நேரத்தில் இரண்டு மிகப் பெரிய பிரச்சினைகளே தமிழ் பேசும் மக்கள் முன் விசுவரூபம் கொண்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களுக்குப் பூரண சுதந்திரமும், சம அந்தஸ்தும் வேண்டுமா? அல்லது இனியும் தொடர்ந்து சிங்களவர்களுக்கு அடிமையாகவே வாழ்வதா?'—என்பதே அந்தப் பிரச்சினைகளாகும்.

மகாத்மா காந்தி கூறிய சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதனின் ஆத்மாவினின்றும் பிறக்க வேண்டியதாகும். அதையே தமிழரசுக் கட்சியும் கோருகின்றது.

இப்படியான விடுதலை வேட்கை கொண்டுள்ள தமிழ் பேசும் மக்கள் தமது பிறப்புரிமைகளை யூ. என். பி. கட்சியின் அடிமைகளாகித் தம் ஆத்மாக்களையே அவர்களுக்கு விற்றுவிட்ட காங்கிரஸ் காரர்களிடமா கொடுக்கப் போகின்றது?

யூ. என். பி. கட்சி என்ற தலையின் வாலாக அல்லவா காங்கிரஸ் கட்சி ஆடிக் கொண்டிருக்கிறது.

(4ம்-பக்கம் பர்க்க)

## எம் தலைவன் அழகக்கோன்!

—செல்வி ராஜம் புஷ்பவனம்—

அழகுதவழ் இயற்கைவளம் கொழிக்கும் எங்கள்
அழகூராம் மன்னாரின் பொங்கு செல்வம்
வழங்குகடல் வாரிவரும் முத்தும் மீனும்
வயல்வெளியும் உப்புவளர் ஏரி யாவும்
உழவோர்க்கும் உழைப்போர்க்கும் சொந்த மன்றோ
உள்ளபொருள் பிறருக்கே கொடுப்போ மாகில்
பழமைமிகு எம்உரிமை இழப்பே... மன்றோ
பசித்தாலும் புலிபுல்லைத் தொடுமோ சொல்வீர்!

வழமையாய் வாழ்ந்துவரும் இன்ப வீட்டை
வழங்குவமோ அந்நியர்கள் ஆட்சி செய்ய
இளமைமிகு நல்வாழ்வு வாழ்தற் கான
இன்மகனைக் கிணற்றினிலே தள்வா ருண்டோ
பழச்சுவையாம் பைந்தமிழை உண்டு வாழ்ந்தோர்
பணயமே வைத்துயிரை உரிமை காப்பார்
அழகொளிரும் தலைவனையே ஏற்பார் உண்மை
அதுவேபோல் எம்தலைவன் அழகக் கோனே!

தலைமை தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN


## யாழ்ப்பாணத்துக்கு 300 சிங்கள உத்தியோகத்தர்கள்!

(நமது நிருபர்)

பொதுத் தேர்தல் தினத்தன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றுவதற்காக தென்னிலங்கையிலிருந்து 300 சிங்கள உத்தியோகத்தர்கள் அனுப்பப்படவிருக்கின்றனர்.

வட பகுதியிலுள்ள ஒரு தமிழ் அரசியற் கட்சி சிங்கள ஊழியர்களேயே தேர்தல் வேலைகளுக்கு வடக்கே அனுப்புமாறும் தேர்தல் ஆணையாளரிடமும், பிரதமரிடமும் கேட்டுக் கொண்டதாக ஏற்கெனவே செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே.

# கோப்பாய் தொகுதிக்கு கதிரவேற்பிள்ளை ஆற்றிய சேவைகள் என்ன?



கோப்பாய்த் தொகுதியின் முன்னுள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தமது தொகுதிக்கு எதனைச் சாதித்தார்? எதுவுமே செய்யவில்லை என்று சிலர் பொய்ப்பிரசாரம் செய்கின்றனர். அவர்களின் பொய்ப்பிரசாரத்தை முறியடிக்குமுகமாக அவர் தொகுதிக்கு செய்த சேவை சிலவற்றை ஒரு துண்டுப் பிரசுரமாக வெளியிட்டுள்ளனர் கட்சி ஆதரவாளர்கள்.

அப்பிரசுரம் வருமாறு:—

★ திரு. சி. கதிரவேலுப்பிள்ளை செய்த சேவைகளில் அச்சுவேலியில் அமைக்கப்படும் கைத்தொழிற்பேட்டை முதலிடம் பெறும். பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தம் தொகுதிகளுக்கு இதனைப் பெற முற்பட்டபோதும் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் இடைவிடா முயற்சியினுல் கைத்தொழிற்பேட்டை எமது தொகுதியில்நிறுவப்பட்டது; 65 ஏக்கர் நிலத்தில் 70 இலட்சம் ரூபா செலவில் நிறுவப்படுகிறது. இக்கைத்தொழிற்பேட்டையில் 35 வகையான தொழிற்சாலைகள் கட்டப்படும். இக்கைத்தொழிற்பேட்டையின் வேலைகள் முடிந்த பின்னர் சுமார் 5,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும். அச்சுவேலி ஒரு கைத்தொழில் நகரமாகும். யாழ்ப்பாணத்தின் பொருள் வளம் பெருகும்.

★ அச்செழு, புத்தூர், வளலாய், கதிரிப்பாய், நவக்கிரி, ஊரெழு ஆகிய கிராமசபைகளால் மின்சாரம் வழங்கமுடியாததை அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டி, மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்க வழிசெய்துள்ளார்.

★ அச்சுவேலியில் 216 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. வீடமைப்புத் திட்டம் ஒன்றை அரசாங்கத்தின் உதவியுடன் உருவாக்கினுர். செல்வநாயகபுரம் என்று அழைக்கப்படும் இவ் வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 54 வீடுகள் குடியிருப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்து 54 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவையும் மிகவிரைவில் குடியிருப்பாளர்களுக்குக் கொடுக்கப்படும். மிகுதி 108 வீடுகளும் விரைவில் கட்டப்படும்.

★ வீடுகட்டி வசிப்பதற்கு நிலமில்லாதவர்களுக்கு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் அரசாங்க உதவியுடன் நிலத்தைப் பெற்றுக்கொடுத்தார். உரும்பராய், புத்தூர், திடற்புலம் போன்ற குடியிருப்புத் திட்டங்களில் பலர் குடியமர்த்தப்பட்டனர். காலப்போக்கில் இத்திட்டங்களை அமுல்நடத்திக் குடியிருக்க நிலமில்லாதோர்க்கும் நிலம் வழங்க முடிவுசெய்துள்ளார்.

★ இளம் விவசாயிகள் குடியேற்றத் திட்டங்களில் கோப்பாய்த் தொகுதியைச் சேர்ந்தவர்களே கூடிய தொகையினராக உள்ளனர். அவர்களுக்கு இடம் எடுத்துக் கொடுக்க, திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்களே முழு முதற்காரணமாக இருந்தார். இதுபோலவே பெரும்பாலான இளைஞர்களை விவசாயப் படையில் சேர்த்துள்ளார்.

★ வட மாகாணத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள 5 மின் தறித் தொழிற்சாலைகளில் ஒன்றை கோப்பாய்த் தொகுதிக்குப் பெற்றுக்கொடுத்துள்ளார். கோப்பாய்க் கிராமசபை எல்லைக்குள் பொது விளையாட்டு மைதானமொன்றும், புத்தூரைச் சேர்ந்த நிலாவரையில் பொது மராமத்து இலாகாத் தொழிற்சாலை ஒன்றும், அச்செழு, அச்சுவேலி ஆகிய இடங்களில் உப-தபாற்கந்தோர்களும் உரும்பராயில் தபாற்கந்தோரும், அச்சுவேலியில் பொலிஸ் நிலயமும் இவரின் முயற்சியால் நிறுவப்பட்டன.

★ கோப்பாய் அரசினர் வைத்தியசாலை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அச்சுவேலி ஆஸ்பத்திரிக்குப் புதிய டாக்டர், மின்சாரம், குழாய் நீர், பிரசவ விடுதி ஆகியவற்றுக்குத் திட்டங்களை உருவாக்கிப் படிப்படியாகச் செயல் படுத்தப்படுகின்றன.

★ ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, நீர்வேலி, வசாவிளான், கோப்பாய், உரும்பராய் ஆகிய இடங்களிலுள்ள பல பாடசாலைகள் இவரின் முயற்சியால் விஸ்தரிக்கப்பட்டுள்ளன,

★ தொகுதி மக்களினதும், பாடசாலைப் போக்குவரத்துக் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு பல கிராமங்களும் குறுகிய தூர பஸ் சேவைகள் இவரால் ஒழுங்கு செய்யப்பட்டன.

★ தோப்பு, நவக்கிரி, அச்செழு, நீர்வேலி ஆகிய பகுதிகளிலுள்ள விவசாயிகளின் போக்குவரத்து வசதியின்மையை அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டி இராசாவீதி திருத்துவதற்கு 40,000 ரூபா ஒதுக்கச் செய்தார். இவ் வீதி திருத்தப்பட்டபின் யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலிக்கு ஒரு நேரடி பஸ் சேவை நடத்தப்படும்.

★ புத்தூர் பகுதியிலுள்ள வாதரவத்தை மக்களின் நீண்ட நாள் குறைபாடான குடி தண்ணீர் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு அரசாங்கத்துக்கு பலமுறை இடித்துக் கூறியதன் பயனுக குடி தண்ணீர் திட்டத்திற்கென (1,50,000) ஒருலட்சத்து ஐம்பதினுயிரம் ரூபா செலவில் திட்டம் உருவாகிறது.

இவற்றில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது யாதெனில் இன்னும் அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கும் மாற்றுக் கட்சியினர் செய்ய முடியாத தொகுதி முன்னேற்றங்களை திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் சாதித்துள்ளார்.

## பிரயாணிகளுக்கு தொல்லை! பொலிசில் புகார்!!

(முல்லைத்தீவு நிருபர்)

பஸ் சாரதியொருவர் அரசியல் காரணங்களுக்காகப் பிரயாணிகளுக்குத் தொல்லை கொடுக்கும் சம்பவங்கள் கடந்த வாரத்திலிருந்து முல்லைத்தீவுப்பகுதியில்நடப்பதாக அறியக்கிடக்கிறது.

இதனுல் கடந்த சனிக்கிழமையன்று முல்லைத்தீவிலிருந்து குமுழமுனைக்குச் சென்ற பிரயாணியொருவர் தாக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னரும் தண்ணீரூற்றில் ஒருவர் தாக்கப்பட்டதாகவும் பேசிக்கொள்ளப்படுகிறது.

இதனுல் கொதிப்படைந்துள்ள பிரயாணிகள் இச்சம்பவங்களையிட்டு முல்லைத்தீவு பொலீசில் புகார்செய்துள்ளார்கள்.

## தியாகராசா திரும்பிப்பார் ராசா!

ஒற்றையாட்சி அமைப்பில் ஐக்கிய இலங்கையை உருவாக்கவே நாம் விரும்புகிறேம். சிங்களத் தலைவர்களையோ, சிங்கள மக்களையோ எதிர்த்து நாம் உரிமைகளைப் பெறமுடியாது. சிங்களத் தலைவர்களுடன் நாம் சேரவேண்டும்.

—ஆ. தியாகராசா,
(வட்டுக்கோட்டை தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்—தினகரன் 8-5-70)

இலங்கையில் வகுப்புவாதப் புயல் அடித்துக் கொண்டிருக்கிறது. சிங்களவருடைய தாழ்வு மனப்பான்மை தாராள மனப்பான்மைக்கு இடமளிக்காது. ஆகவே நாம் எவ்வளவு கூடிய கெதியில் பிரிந்து வாழமுடியுமோ அவ்வளவுக்கு நல்லது......''

''சிங்களவருடன் காரியங்களை சீர்ப்படுத்திக் கொண்டு வாழமுடியுமென சில தமிழ்த் தலைவர்கள் எண்ணுகின்றனர். இதுபோன்று தமிழரை அழிக்கக் கூடியவழி வேறில்லை''

—ஆ. தியாகராசா,
(1956ம் ஆண்டு தாமே வெளியிட்ட தனித்தமிழ் ராஜ்யம் நூலில்.)

## சுதந்திரக் கட்சியும்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டேன். அதாவது சிங்கள வீரன் துட்டகைமுனுவின் வீரப்பரம்பரையில் வந்த சிங்கள வீர வாலிபர்கள் அனுராதபுரத்தில் இருக்கிறுர்களென்று.

மேலும் இக் கூட்டத்தில் சிங்கள மகாஜன கட்சியை சேர்ந்த யூ. டி. அபயசேகரா அட்வக்கேற், பேசும்போழுது பெடறல் கட்சியின் தலைவர் செல்வநாயகம் இட்ட கட்டளையின்படி ரகசிய ஒப்பந்தத்தில் டட்லி கையெழுத்திட்டதாகவும் அதன்மூலம் செல்வனுயகமும் பெடறல் கட்சியும் தந்திரமாக மிகவும் சாதுரியமாக தமிழர்களின் உரிமை சிலவற்றை பெற்றுவிட்டதாகவும் விபரித்தார்.

அதில் 1965ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி விஷேட விதிகள் சட்டம் மிகமுக்கியமான தொன்றென்றும், இதனுல் சிங்களமே இந்நாட்டின் அரசாங்க பாஷை என்பதை இச்சட்டம் தடுதது நிறுத்திவிட்டதாகவும், மேலும் அரசாங்க ஊழியர் விஷயத்தில் சிங்களம் படிக்கமுயற்சிக்காதவர்கட்கு மேலும் பல வருட காலக் கெடு கொடுக்கப்பட்டதாகவும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிங்களவரை குடி ஏற்றுவதை பெடறல்கட்சி தடுத்துவிட்டதாகவும், தமிழ்மக்களுக்கோர் பல்கலைக் கழக விஷயத்திலும் பெடறல் கட்சிவெற்றியீட்டிக்கொண்டிருப்பதாகவும் கூறினுர்,

இம்முறை அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பு தமிழர் கையில்தான்—அதாவது பெடறல் கட்சியின் கையில் தான் தங்கியிருப்பதாக திருகோணமலையில் பெடறல் கட்சியில் போட்டியிடும் நேமிநாதன் கூறியிருப்பதாக பத்திரிகையில்வந்த செய்தி ஒன்றை மொழிபெயர்த்துக் காட்டினுர். இம்முறை கடும் போட்டி நடக்கின்றபடியினுல் சிறிலங்கா கட்சியோ அல்லது யூ. என். பி. கட்சியோ அரசாங்கம் அமைக்க போதிய பலமில்லாது வரும் நேரத்தில் பெடறல் கட்சியிடமும் செல்வநாயகத்திடமும் மண்டியிட்டு அவர்கள் கேட்கும் அத்தனையும் கொடுக்க நான் முந்தி, நீ முந்தி, என்று டட்லியும் சிறிமாவும் முயற்சிசெய்வார்கள் அப்பொழுது இதுதான் நல்ல தருணமென்று செல்வநாயகம் தங்கள் உரிமைகளைபெற இவ்விருகட்சிகளில் எதையாவது ஒரு கட்சியை ஆதரிக்கலாம். பாராளுமன்ற கதிரையை கைப்பற்றுவதற்காக இவர்கள் சிங்களவரின் உரிமையை தமிழர்கட்கு விற்றுவிடுவார்கள், ஆகவேசிங்களமக்களே, கவனமாக உங்கள் வாக்குகளை பாவித்து சிங்கள மகாஜனக் கட்சியில் அனுராதபுரத்தில் போட்டியிடும் அல்விசை ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

குறிப்பு: இக்கூட்டத்தில் எந்த ஒரு கட்டத்திலேயும் எந்த ஒரு பேச்சாளரும் தமிழ் காங்கிரசைப்பற்றியோ அல்லது ஜீ' ஜீ, பொன்னம்பலத்தைப் பற்றியோ பேசவில்லை.

## திரு. மகாலிங்கம் தலைவரானுர்

திருகோணமலை உயர்ந்தபாட்டு வட்டாரக் கரைவலை மீன்பிடிச் சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் திருகோணமலையில் அண்மையில் நடைபெற்றது.

இவ்வருடப் புதிய தலைவராக திருகோணமலை பிரபல வர்த்தகரும், தமிழுரிமைப் போராட்டத்தின் போது சத்தியாக்கிரக இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டு சிறை சென்றவருமான தியாகி. திரு. செ. மகாலிங்கம் அவர்கள் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மற்றும் உபதலைவர்—திரு. மா. கோடிலிங்கம் — செயலாளர் திரு. இர. சண்முகநாதன்—உபசெயலாளர் திரு. சு. ஆழ்வாப்பிள்ளை—பொருளாளர். திரு. சி. சச்சிதானந்தவேல் ஆகியோரும் உட்பட ஆறுபேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## குமாரசாமியை விட...

(2ம் பக்கம் தொடர்ச்சி)

துணியும், மணியும், உணவும பிற நாடுகளுக்கு அனுப்பிய தமிழன் வாழ வழியற்றேனெனச் சொல்லி வயோதிபா மடத்தைக்கட்டியதற்காக வாய் பொத்திருந்தார்?

எனவேதான், கடமையைச் செய்துவிட்டு, செய்த கடமைக்காகப் பிரதியுபகாரமாக உங்கள் வாக்குகளைத் தாருங்கள் எனத் தன் மானமிழந்து கேட்காமல்— தாய் மொழிக்குப் பழி வந்துவிட்டது! பொங்கு தமிழர்க்கின்னல் வந்துவிட்டது! தமிழினமே, விழி! எழு!! இணைப்பாட்சி கண்டிட ஒற்றையாம் சிங்கள ஆட்சி ஒழிந்து சமஷ்டியாட்சி மலர்ந்திட வேண்டும். அந்த இலட்சியத்தில் இலங்கை அடைவதற்குத் தமிழரசுக் கட்சி வெற்றி அவசியம்; அது மக்கள் கையிலுள்ளது. தமிழரசுக் கட்சியின் கொள்கையும் கோட்பாடும் உங்களுக்குப் பிடித்தமானுல் தமிழரசை ஆதரியுங்கள் என மிகுந்தளவு அரசியல் கண்ணியத்தோடு கதைக்கும் திரு. நவரத்தினம் அவர்களை என்போன்ற இளந்தமிழர் சமுதாயம் ஏற்றம்பெற கடந்த முறையிலும் பார்க்கக் கூடுதலான வாக்குகளால் வெற்றி பெறச் செய்யக் கேட்டு அல்லாரையில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரசுக் கூட்டத்தில் திரு. தா. இ. இராசகுலேந்திரன் விடுத்த சவாலை ஏற்றுக் கொள்கிறேன்.

நவரத்தினம் 14 வருஷமும் பண்ணியதென்ன!— திரு. குமாரசாமி அவர்களுடையதை விடப் பத்து மடங்கு கூட என்பதை தக்க ஆதாரங்களுடன் காட்டி விவாதிக்க நான் தயார்! பொது மேடை எப்போது? எங்கே?

## சிக்கள ஏகாதி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே எதிர்வரும் தேர்தல் காங்கிரசால் வழி நடத்தப்படும் அடிமைத்தனத்திற்கா அல்லது தன்மானமிக்க சம அந்தஸ்து நிரம்பிய சுதந்திர வாழ்வுக்கா, என்பதை நிர்ணயிக்கட்டும்."

இவ்வாறு டாக்டர் நாகநாதன் மேலும் கூறினுர்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்,